**சிறப்பு சார்பு நீதிமன்றம் ( மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம்) ஈரோடு**

**முன்னிலை:** திரு.G.இரகோத்தமன், M.A., L.L.M.,
சிறப்பு சார்பு நீதிபதி,
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்),
ஈரோடு.

**எம்.சி.ஓ.பி எண்.218/2022**

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 03 ம் தேதியன்று மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.2 ன்** வாக்குமூலம் (1873-ம் ஆண்டு 10வது சட்டத்தின் விதிகளின் ஏற்பாட்டின்படி) திரு.G.இரகோத்தமன், M.A., L.L.M., சிறப்பு சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு திருமதி. A.கலா, பெஞ்ச் கிளார்க் கிரேடு - II அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | த-க-பெ | : | பழனியப்பன் |
| வயது | : | 40 | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 03.06.2025 | முகவரி | : | |
| நேரம் | : | | | | |

---

**ம.சா.2: முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

ம.சா.2 ஆகிய நான் இந்த மனுவில் என் தரப்பு முதல் விசாரணை நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன்.

எனது ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.23 ஆக குறியீடு**



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED180003502022/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com

**செய்யப்படுகிறது.** (அசல் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் குறியீடு செய்யப்பட்டது.)

**ம.சா.2: குறுக்கு விசாரணை – (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்தில் அடிபட்ட விக்னேஷ் எனது நண்பர் ஆவார். நான் ஈரோடு செல்வதற்காக வரும் போது விபத்து ஏற்பட்டது. நான் சம்பவ இடத்தில் இருக்கும் போது காவல்துறையினர் வந்தார்களா என்றால் வரவில்லை. சம்பவத்தில் எனக்கும் அடிபட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கும் அடிபட்டதால் தான் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் எனக்கு விபத்தில் அடிபட்டதாகவோ, திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. எனக்கு விபத்தில் அடிபட்டதால் தான் நான் போலீசாரிடம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் 1 1/2 நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் தற்போது என்னால் தாக்கல் செய்யமுடியும். இந்த வழக்கில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது பிரமாணப்பத்திரிக்கையில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று எனது பேனாவில் நான் தான் எழுதி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பிரமாணப்பத்திரிக்கையில் எழுதியுள்ள சங்கதிகள் கருப்பு மையிலும், எனது கையொப்பம் நீல நிறத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயம் விக்னேஷ் உடன் நான் செல்லவில்லை என்றாலும், தலைக்கவசம் அணிந்து



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED180003502022/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com



செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அதன் பிறகும் இந்த சம்பவத்தை பற்றி நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக விக்னேஷ் புகார் கொடுத்தாரா என்று நான் கேட்டுகொள்ளவில்லை, விபத்தில் அடிபட்டது சம்மந்தமாக நான் நஷ்டஈடு கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் நான் கண்ணுற்ற சாட்சி அல்ல என்றால் சரியல்ல. விக்னேஷ் எனது நண்பர் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து விக்னேசின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

**ம.சா.2: குறுக்கு விசாரணை – (4 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் இருச்சக்கர வாகனத்தை விக்னேஷ் தான் ஓட்டிவந்தார். அவர் கிழக்கிருந்து மேற்கு நோக்கி சாலையின் இடதுபுறத்தில் கவனமாகத்தான் வந்தார் என்றால் சரிதான். விபத்திற்கு TN 29 J 0621 என்ற யமாகா கிரக்ஸ் வாகனத்தை ஓட்டி வந்தவர் திடீரென ரோடின் வலதுபுறம் திரும்பியதால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான்.

**ம.சா.2: மறுவிசாரணை இல்லை.**

Sd/–செந்தில்குமார்

திறந்த நீதிமன்றத்தில் மேலே சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–G.Ragothaman, M.A., L.L.M.,
சிறப்பு சார்பு நீதிபதி, மோ.வா.வி.வழக்குகள்,
ஈரோடு.



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED180003502022/truecopy/order-4.pdf